# இளைஞர்களின் சமூக ஊடக பாவனையின் தாக்கங்கள்: அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச செயலக பிரிவினை அடிப்படையாக கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**அழகுராஜா, ரா[a]., சசிந்தகமல், க[a]., விஜய், ப[b]**

[a]*யாழ்ப்பாணப் பல்கலைகழகம், இலங்கை*

[b]*யாழ்ப்பாணப் பல்கலைகழக கல்லூரி, இலங்கை*

---

இளைஞர்கள் மத்தியிலான சமூக ஊடக பாவனை என்பது உலகளாவிய ரீதியில் முக்கியமான சமூக பொருண்மையாக காணப்படுகின்றது. சமூக ஊடகம் என்பது இணையத்தை அடிப்படையாக கொண்ட செயற்பாடாகும் மேலும் கருத்தியல் மற்றும் தொழிநுட்பவியலை கட்டமைப்பு செய்யும் ஊடகமாக செயற்படுகின்றது. இன்றைய நிலையில் இளைஞர்கள் மத்தியில் வாட்சாப், முகப்புத்தகம், வைபர் போன்ற பல சமூக ஊடகங்கள் பாவனையில் காணப்படுகின்றது. ஆய்வானது இளைஞர்கள் மத்தியில் காணப்படும் சமூக ஊடக பாவனையின் தாக்கங்களை இனங்கண்டு அதனை வெளிக்கொணர்வதுடன் சமூக ஊடகத்தால் ஏற்படுகின்ற பாதக நிலைமையை தணிக்கும் தீர்வினை முன்வைப்பதாக காணப்படுகின்றது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசசெயலக பிரிவினை அடிப்படையாக கொண்டு கலப்பு ஆய்வு (Mix Methoud) முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலை தரவுச்சேகரிப்பு கருவிகளாக வினாக்கொத்து, விடய ஆய்வு, குவிமையக்குழு கலந்துரையாடல், அவதானம் போன்றவற்றின் ஊடாகவும், இரண்டாம் நிலை தரவுகளாக புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையமூலம் போன்றவற்றின் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. கணிய தரவுகள் SPSS மென்பொருளினாலும், பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வின் ஊடாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன. ஆய்வில் கலந்து கொண்டவர்களில் 91% இளைஞர்கள் சமூக ஊடக பாவனையாளர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் அதிகமாக பயன்படுத்தும் சமூக ஊடகமாக வைபர் (Viber) காணப்படுவதுடன் அதற்கான காரணமாக 61% ஆனவர்கள் நண்பர்களின் வலையமைப்பை எடுத்துக்காட்டுகின்றனர். மேலும் 36% ஆன இளைஞர்கள் ஒரு நாளில் 2-4 மணித்தியாலம் சமூக ஊடக பாவனையில் ஈடுபடுகின்றனர். சமூக ஊடக பாவனையில் 90% நண்பர்களுக்கிடையிலாக வலையமைப்பை பேணுவதாகவும், 77% தங்களின் திறமைகளை வெளிப்படுத் துபவர்களாகவும், மற்றும் 86% ஆனவர்கள் செய்திகள் பகிர்தல் தொடர்பான விடயங்களில் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர். சமூக ஊடக பாவனையில் ஏற்பட்ட தீமையாக 41% இளைஞர்கள் நேர வீண்விரயம், 41% காதல் மோசடிகள், 15% பாலியல் தொந்தரவு போன்ற விடயங்களை எதிர்கொண்டுள்ளனர். 37% இளைஞர்கள் தங்களின் தனிப்பட்ட விடயம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். சமூக ஊடக பாவனையில் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக 31% ஆனவர்கள் பாவனையினை குறைத்துள்ளனர். மேலும் போலியான தகவல்களால் தற்காலத்தில் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், குடும்ப உறுப்பினர்களிடம் நேர வீண்விரயம், பதிவுகள் பகிர்தல் போன்ற விடயங்களுக்காக குடும்ப உறுப்பினர்களிடம் முரண்படுவதாகவும் தெரிவித்தனர். சமூக ஊடக பாவனையில் இளைஞர்கள் நேர் மறையான பல்வேறு விளைவுகளை எதிர்கொள்கின்றனர். சமூக ஊடக பாவனையால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு அவைசார்ந்த வினைத்திறனான சட்டங்களை உருவாக்குதல், தீர்வுத்திட்ட கொள்கைகளை உருவாக்குதல், சமூக ஊடகத்தின் மீதான நேரடியான கண்காணிப்பு என்பன அவசியமாகும்.